# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## இரண்டாந் தவணைப் பரீட்சை – 2017
### நாடகமும் அரங்கியலும் செய்முறைப் பரீட்சை.
### வினாத்தாள் -I

**நேரம் :-3மணித்தியாலங்கள்**

1. **கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் 1:-**

கீழ் வரும் விடயம் பொருள்களில் பொருள்களில் இருந்து யாதாயினும் ஒன்றைத் தெரிவு செய்து ஊமத்தில் அதனைச் சித்திரிக்குக.

1) பரோட்டா தயாரிப்பதற்கான பணியில் ஈடுபடுதல்
2) மாட்டு வண்டியில் பயணம் செய்யும் போது மிரண்டோடும் மாடுகளை அடக்குதல்.
3) திருமண வீட்டிற்கு அலங்காரம் செய்தல்
4) மங்கலகரமான நிகழ்வொன்றை வீடியோ எடுத்தல்

**கணிப்பீட்டு நியதிகள்**

1) கற்பனை
2) படைப்பாக்கம்
3) உடல் உளத் தளர்நிலை
4) சித்திரிப்பில் நுட்பம்
5) அரங்க வெளிப்பயன்பாடு

The National e-learning Portal for The General Education

(**5 X 4 = 20** புள்ளிகள்)

2. **கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் 2:-**

பின்வரும் யாதாயினுமொரு தோழமையுடன் சம்பந்தப்படும் பாத்திரங்களுக்கிடையிலான சுவையான சொல்லாடலை ஆக்குங்கள்.

1) உணவு உண்டவாறிருக்கும் தாயாரும் அவ்வுணவில் தனக்கும் ஒரு பாகத்தைத் தருமாறு கேட்கும் பூனையாரும்.
2) தன்னை வெட்ட வேண்டாம் எனக் கெஞ்சும் மரமும், அதனை வெட்ட வரும் மரவெட்டியும்.
3) வீட்டுக்குள் புகுந்து தொந்தரவு செய்யும் எலியாரும் அதனை அடிக்க முற்படும் வீட்டுக்காரரும்.

நீர் தயாரித்த சொல்லாடற் பகுதியை இன்னொருவருடன் சேர்ந்து பாத்திரமேற்று சித்திருக்குக.

**கணிப்பீட்டு நியதிகள்**

1) சொல்லாடலில் கட்டமைப்பு
2) சொல்லாடலில் சுவார்சியத் தன்மை
3) கற்பனை
4) அரங்க வெளிப் பயன்பாடு
5) பாத்திரச் சித்திரிப்பு

**(5 X 4 = 20 புள்ளிகள்)**

3. **கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் 3:-**

புதியதொரு வீடு நாடகத்தில் இடம் பெறும் முதலாவது காட்சியைச் சூழலில் உள்ள பொருட்களைப் பயன்படுத்தி விதானிப்புச் செய்க. அதில் பொருத்தமான பாத்திரத்தை ஏற்று அதனைப் பொருத்தமான இடத்தில் நிலைப்படுத்திக் காட்டுக.

**கணிப்பீட்டு நியதிகள்**

1) காட்சி விதானிப்பின் பொருத்தப்பாடு
2) நாடகச் சூழல் வெளிப்படுத்தப் பெறல்
3) மேடைச் சமநிலை பேணப் பெறல்
4) மேடைப் பொருள் தெரிவின் பொருத்தப்பாடு
5) பாத்திரம் நிறுத்தப் பெறும் இடத்தின் பொருத்தப்பாடு

**(5 X 4 = 20 புள்ளிகள்)**

4. **கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் 4:-**

பின்வரும் சூழமைவுகளில் ஒன்றினைத் தெரிவு செய்து, குழுவாக அதனை அசைவியக்க வடிவாக்கம் செய்க

1) கரை வலை இழுத்தல்
2) சூரன் போர்
3) ரோபோக்களின் நடனம்

**கணிப்பீட்டு நியதிகள்**

1) கற்பனை
2) படைப்பாக்கம்
3) அரங்க வெளிப் பயன்பாடு
4) ஒத்திசைவு
5) கருத்து வெளிப்பாடு

**(5 X 4 = 20 புள்ளிகள்)**

5. **கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் 5:-**

"புதியதொரு வீடு" நாடகத்தில் இருந்து உமது ஆசிரியரால் விதந்துரைக்கப் பெறும் பகுதியினைக் குழுவாகச் சித்திரிக்குக

**கணிப்பீட்டு நியதிகள்**

1) உணர்ச்சி வெளிப்பாடு
2) பாத்திரப் பண்பு வெளிப்படுதல்
3) அரங்க வெளிப்பயன்பாடு
4) செயலியக்கங்களூடாக மேற்கியியம்பும் அழகியல்
6) படைப்பாக்கம்.

**(5 X 4 = 20 புள்ளிகள்)**

The National e-learning Portal for The General Education

The National e-learning Portal for The General Education